ஊராட்சி மன்றத் தலைவர், ஆரூர் ஊராட்சி
காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திருமதி.D.சசிகலா.,

ந.க.எண்.001/2024 நாள்.05.02.2024

பொருள் - மனைபிரிவு ஒப்புதல் - காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் - ஆரூர் ஊராட்சி மற்றும் கிராமம் - சர்வே எண்கள்.33/1A1A, 33/3A1, 33/3B, 33/4B1, 33/4C2 & 33/4D2-ல் மொத்த பரப்பு 1.06 ஏக்கர் (அ) 4792 ச.மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள பெயரிடப்படாத வீட்டு மனைபிரிவு (Lay Out) வரைபடத்திற்கு **SWP/DTCP/KANCHIPURAM DISTRICT - LAYOUT NO: 13/2024** என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது - மேற்படி மனைபிரிவில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 26 வீட்டு மனைகள் விற்பனை செய்ய ஆரூர் கிராம ஊராட்சிமின் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடுதல்.

பார்வை -
1. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்/உறுப்பினர் செயலர் காஞ்சிபுரம் அவர்களின் கடிதம் ந.க.எண். W4UVNS63/2024/TCP நாள்.30.01.2024
2. ஆரூர் ஊராட்சி மன்ற தீர்மானம் எண்.12 நாள்.05.02.2024
3. மனுதாரர் திரு.K.சந்தன் பாலா, கதவு எண்.83எ. இராஜ வீதி, வாலாஜாபாத் டவுன், காஞ்சிபுரம் மாவட்டம் என்பவரின் விண்ணப்பம்.

******

உத்தரவு :-

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், ஆரூர் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்கள்.33/1A1A, 33/3A1, 33/3B, 33/4B1, 33/4C2 & 33/4D2-ல் மொத்த பரப்பு 1.06 ஏக்கர் (அ) 4792 ச.மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள பெயரிடப்படாத மனைப்பிரிவிற்கான அனைத்து சாலைகள், பொது உபயோகம் மற்றும் மூலை முடுக்குகள் பார்வை 1-ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்/உறுப்பினர் செயலர் காஞ்சிபுரம் அவர்களின் கடிதத்தின் வாயிலாக பெறப்பட்ட வரைபடத்தில் (Blue Print) தெரிவித்துள்ளபடி, **அனைத்து சாலைகள், மூலை முடுக்குகள், பொது உபயோகம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கான இடம் ஆரூர் கிராம ஊராட்சிமின்** பெயரில் பத்திரபதிவு செய்யப்பட்டு தான பத்திரம் எண்.181/2024 நாள்.11.01.2024-ன்படி பெறப்பட்டுள்ளது.

மேற்படி அதனைதொடர்ந்து பார்வை 1-ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்/உறுப்பினர் செயலர், காஞ்சிபுரம் அவர்களின் கடிதத்தில் மேற்படி மனைபிரிவு வரைபடத்திற்கு **SWP/DTCP/KANCHIPURAM DISTRICT - LAYOUT NO:13/2024** என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அங்கீகாரம் (Technical Sanction) அளிக்கபட்டுள்ளதாலும், மனைப்பிரிவின் பரப்பிற்கு அரசு சந்தை மதிப்புப்படி (Market Value of Land) 3% தொகை மற்றும் கிராம ஊராட்சி வளர்ச்சி கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதாலும், மேற்படி பெயரிடப்படாத மனைப்பிரிவில் (Lay Out) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள **26** மனைகளை விற்பனை செய்ய கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஆரூர் கிராம ஊராட்சிமின் தீர்மானம் எண்.12 நாள்.05.02.2024-ன்படி இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

//நிபந்தனைகள்//

- நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என கண்டறியப்பட்டால் (அ) மனைபிரிவிற்கு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைபிரிவிற்கு வழங்கப்பட்ட இறுதி ஒப்புதல் ரத்து செய்யப்படும்.

- சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், மனுதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான நகுதியுள்ள நீதிமன்றத்தில் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய கிராம ஊராட்சி பொருத்தமான அமைப்பு அல்ல.

- மாவட்ட நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

- மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்/உறுப்பினர் செயலர், காஞ்சிபுரம் அவர்களின் கடித ந.க.எண். W4UVNS63/2024/TCP நாள்.30.01.2024-ன்படி செயல்முறை கடிதத்தில் தெரிவித்துள்ள மனைப்பிரிவு நிபந்தனைகள் தவறாது மனுதாரர் பின்பற்ற வேண்டும்.

- ஊராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட திறந்தவெளி ஒதுக்கீட்டு இடம் (OSR) மனைப்பிரிவு ஒப்புதல் பெறும் நபரோ அல்லது வேறு நபர்களோ விற்பனை செய்ய முயற்சித்தால் அவர்கள் மீது குற்றிவியல் நடவடிக்கை தொடரப்படுவதோடு நிலத்தை பறிமுதல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

- 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்.

- இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

- தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்கு சம்மந்தப்பட்ட இடத்தில் 6 அடி X 4 அடி அளவுக்கு குறையாமல் கான்கிரீட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.

ஊராட்சி மன்றத் தலைவர்
ஆசூர் ஊராட்சி
காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம்.

பெறுநர்

திரு.K.சந்தன் பாலா,
கதவு எண்.83A.இராஜ வீதி,
வாலாஜாபாத் டவுன்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

நகல் - மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ), காஞ்சிபுரம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

நகல் - சார் பதிவாளர், வாலாஜாபாத் அவர்களுக்கு மனைகள் பத்திர பதிவு செய்ய அனுமதி செய்யும் பொருட்டு அனுப்பப்படுகிறது.

நகல் - வட்டாட்சியர், வாலாஜாபாத் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

நகல் - The Chairman, Tamilnadu Real Estate Regularity Authority,
No.1A.CMDA Tower II, 1st Floor, Gandhi Irwin Road, Egmore, Chennai – 8.

நகல் - ஊராட்சி செயலர், ஆசூர் ஊராட்சி.